

Vol.28 | No. 08 | August 2024
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்






Mission League General Body Meeting,
July 14, 2024, Padanthalumoodu



First Holy Communion and Parish Feast,
July 07, 2024, St. Thomas Church, Muzhucode



First Holy Communion and Parish Feast,
July 27, 2024, St. James Church, Mankarai

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 28 No :08 AUGUST 2024



# இறையருள்
# IRAIARUL


## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. S.M. Edwinson**

**Fr. Antony Thakidiyel**

**Mr. Iyathurai**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**R. Jesila Mary**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் திருமுகம் | 08 |
| மறைக்கல்வி | 13 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 15 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 16 |
| மிஷன்லீக் இயக்கம் | 19 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 21 |
| இல்வாழ்வு இயக்கம் | 23 |
| புனித வின்சென்ட் தே பவுல் சபை | 25 |
| மறைமாவட்ட செய்திகள் | 27 |
| மறைவட்ட செய்திகள் | 28 |
| தென்காசி மறைபரப்புதளம் | 35 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 36 |
| MONTHLY AGENDA – AUGUST 2024 | 37 |
| BISHOP'S ENGAGEMENTS AUG 2024 | 39 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/160/2024**
**31 JULY 2024**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckalay!

We are entering the month of August, which is important for all of us on various counts. The month begins with the celebration of the feast of St John Mary Vianney, the patron of all priests, especially the diocesan priests. In the middle of the month, we have the twin solemnities of the Assumption of our Blessed Mother and Independence Day. In this circular, I want to highlight the significance of these events that we shall celebrate.

Born in 1786 in France, St John Mary Vianney overcame significant struggles in his studies to become a priest. As the parish priest of Ars, he transformed a spiritually neglected village into a model Christian community through his extraordinary dedication, preaching, and personal holiness.

Vianney was known for his profound humility, intense devotion to God, strict asceticism, and commitment to prayer. He possessed remarkable spiritual gifts, including the ability to read souls, prophetic insight, and miraculous healing powers. His ministry was characterised by long hours in the confessional, powerful preaching, and a deep zeal for saving souls.

Key aspects of Vianney's spiritual teachings included the universal call to holiness, the importance of prayer, the value of mortification, devotion to the Blessed Virgin Mary, reverence for the Eucharist, and a passionate concern for the salvation of souls. Despite facing numerous challenges, including spiritual warfare, physical exhaustion, and misunderstanding from fellow clergy, Vianney

persevered in his ministry.

His legacy includes the transformation of Ars into a vibrant Christian community, the renewal of sacramental life, and his ongoing influence as a model of priestly holiness. Today, Ars remains a popular pilgrimage site, with Vianney's incorrupt body serving as a sign of his sanctity.

Vianney's life is relevant for us priests. It emphasises the importance of personal holiness, dedication to prayer and penance, availability for confession, simplicity of life and message, perseverance in difficulties, and trust in God's grace. St John Vianney's extraordinary life continues to inspire every priest to deeper holiness and more ardent service to God and neighbour.

The Solemnity of the Assumption is a day of profound joy for the Catholic Church. This feast commemorates the belief that Mary, the mother of Jesus, was taken body and soul into heavenly glory at the end of her earthly life. In 1950, Pope Pius XII formally defined this long-held belief as a dogma of the Catholic Church through his apostolic constitution, Munificentissimus Deus.

The Assumption holds deep theological significance. It affirms the dignity of the human body, demonstrating that there is a place for our physical selves in the spiritual realm. This dogma presents Mary as a maternal figure in heaven, offering comfort and hope to believers. The Church sees the Assumption as a natural extension of Mary's unique role in salvation history, beginning with her Immaculate Conception and continuing through her life as the Mother of God.

The Catholic Church teaches that Mary's body was glorified immediately at the end of her earthly life, unlike other mortal beings who must wait until the end of the world for bodily resurrection. This divine gift is seen as fitting for the mother of Jesus. It's important to note that the Assumption differs from Christ's Ascension - while Jesus ascended to Heaven by His power, Mary was taken up by God's power.

Mary's Magnificat, her song of praise recorded in the Gospel of Luke, is seen as a portrait of her soul and personality. It highlights two key aspects of Mary's character: her desire for God to be magnified in

the world and her life and her deep connection to God's word. These qualities make Mary a model of faith and humility for all believers.

The Magnificat reflects Mary's embrace of God's greatness, which stands in contrast to the fear that God might restrict human freedom - a fear often seen as a core element of original sin and a temptation of the modern age. Mary's example encourages believers to recognise God's greatness as essential for human dignity and as a guide for resolving disputes.

Mary becomes a model of one who lived immersed in God's word, which gave her wisdom, goodness, and strength. By affirming Mary's closeness to humanity despite her heavenly status, she becomes a mother figure to whom people can always turn. This aspect of Marian devotion provides comfort and inspiration to many believers.

The dogma of the Assumption, while not explicitly mentioned in Scripture, is supported by a long tradition of belief and practice in the Church. Early references to this belief date back to the second and third centuries, and a rich tradition of iconography depicts Mary entering Heaven bodily.

St John of Damascus, writing in the 8th century, recorded a tradition that Mary died in the presence of all the Apostles. However, when her tomb was opened at St Thomas' request, it was found empty. Thus, the Apostles concluded that her body had been taken up to heaven.

The Church sees scriptural support for the Assumption in passages that emphasise Mary's perfect union with Jesus' destiny as the Saviour. This union is evident throughout Scripture, from Jesus' birth to after his death, as seen in Mary's miraculous conception of Jesus, her prompting of Jesus during his first miracle at Cana, her witness to his crucifixion, and her presence at Pentecost after Jesus' death.

The timing of the dogma's formal definition in 1950, coming in the wake of World War II and at the onset of the Cold War, can be seen as a spiritual affirmation of hope and the ultimate triumph of good over evil. It offers a powerful counter-narrative to the materialistic and often hopeless worldviews that gained prominence in the 20th

century.

15 August also marks India's Independence Day, commemorating the nation's liberation from British colonial rule in 1947. This event was the culmination of a long and often difficult struggle for freedom, led by figures such as Mahatma Gandhi, Jawaharlal Nehru, and countless others who dedicated their lives to the cause of Indian sovereignty.

The path to independence was complex, involving strategies of non-violent resistance, civil disobedience, and negotiations with the British government. While independence brought joy and pride to millions, it was also accompanied by the painful partition of the subcontinent into India and Pakistan, leading to one of the largest mass migrations in human history and tragic communal violence.

Prime Minister Nehru's famous "Tryst with Destiny" speech captured the spirit of the moment: "At the stroke of the midnight hour, when the world sleeps, India will awake to life and freedom." This moment marked a major shift in global politics and inspired anti-colonial movements worldwide.

In the decades since independence, India has emerged as a significant player on the world stage. The country has produced leaders who have made their mark in global politics and whose vision encompassed every sphere of citizens' lives. The nation takes pride in its rich diversity - cultural, geographical, and natural - from the Himalayas to its rivers, flora and fauna, agricultural lands, and mineral resources.

While celebrating its independence and achievements, modern India also faces numerous challenges. These include threats to its unity in diversity, concerns about media independence, economic pressures on the poor, ongoing border issues, disparities in education access, high unemployment rates, environmental degradation, and social issues such as human trafficking and corruption.

Natural disasters, floods, and droughts are becoming more common, while pollution levels and destruction of ecosystems continue to rise. The education system, which has the potential to liberate and promote growth, is not accessible to many rural masses.

Unemployment, especially among the educated, poses dangers for the country's future.

As we reflect on India’s journey since independence, we are called to be active participants in addressing these challenges. In the spirit of nation-builders like Dr Ambedkar, who gave India its Constitution, we must work towards building a society that upholds the ideals of freedom, justice, and equality for all.

The teachings of saintly educators like St Philip Neri and St John Bosco, who made their students become good Christians and honest citizens, can inspire us in this task. As educators and citizens, we are called to build bridges rather than walls and to contribute significantly to uplifting the poor and marginalised.

While the Assumption of Mary and India’s Independence Day may seem unrelated, they both represent significant moments of transformation and hope. They remind us of the diverse ways in which human history unfolds, encompassing both spiritual and political dimensions. Both events speak to the human quest for dignity, freedom, and transcendence.

As we commemorate these events, we are invited to reflect on our role in building a better world. Whether through spiritual devotion inspired by Mary’s example or through active citizenship in the tradition of India's freedom fighters, we are called to contribute to the ongoing story of human progress and liberation.

In the words of Rabindranath Tagore, we pray, “Into that heaven of freedom, my father, let my country awake.” This sentiment echoes both the spiritual elevation celebrated in the Assumption and the aspirations of a free India, uniting our earthly struggles with our highest ideals. As we face the challenges of our time, may we draw inspiration from both our spiritual traditions and our national heritage to work towards a more just, compassionate, and harmonious world.

St John Mary Vianney exemplified extraordinary holiness and dedication in his priestly ministry. His life offers profound inspiration for priests and lay Catholics alike. His extraordinary life as the Curé of Ars continues to challenge and inspire both clergy and laity. His single-minded devotion to God, sacrificial service to his flock and

channels of supernatural grace make him a model for priests and a powerful intercessor for the whole Church. As we celebrate his feast day, may his example spur us all to deeper holiness and more ardent service of God and neighbour. In an age of increasing secularisation and challenges to faith, the witness of St John Vianney reminds us of the transformative power of a life fully dedicated to God. His legacy calls each of us to pursue sanctity with renewed vigour and to work tirelessly for the salvation of souls. Likewise, may the Solemnity of Assumption and the Independence Day celebration reawaken our desire for true freedom, which is realised in our love for God and exemplified in our service to humanity!

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

---

## Inauguration of Hairband project at Cumbum

ஹேர்பேண்ட்(Hairband) திட்டம் என்பது வேலையில்லாத பெண்களுக்கு நிலையான வருமான ஆதாரத்தை உருவாக்கத் தேவையான திறன்களையும் வளங்களையும் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு முயற்சியாகும். இத்திட்டத்தை மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல், 2024 ஜூலை 13, சனிக்கிழமை S.H. கம்பம் மறைத்தொண்டுதளத்தில் தொடங்கி வைத்தார். மறைத்தொண்டுதள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை தோமஸ் காஞ்சிரகாட் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். துவக்க விழாவின் போது, திருத்தொண்டர் அமன்டோ MSW பயிலும் மாணவர்களின் உதவியுடன் கம்பத்தின் பல்வேறு கிராமங்களில் நடத்தப்பட்ட, மக்களின் வாழ்க்கை மற்றும் நிலைமை குறித்த கணக்கெடுப்பின் இறுதி ஆய்வறிக்கையை சமர்ப்பித்தார். காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தின் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோசப் வெள்ளமட்டம் வாழ்த்துரை வழங்கினார்.

Mar Raphael Thattil
Major Archbishop of the Syro-Malabar Church

Port.No.0642/2024

## உயர் பேராயர் திருமுகம்

சீரோ-மலபார் திருச்சபையின் தலைவர் கர்தினால், மார் ராஃபேல் தட்டில், தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும் துறவறத்தாருக்கும் தனது மேய்ப்புப் பணியின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லா இறைமக்களுக்கும் எழுதுவதாவது.

ஆண்டவராகிய ஈசோவின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

ஈசோ மெசியாவில் அன்பு சகோதரர் சகோதரிகளே,

நமது நம்பிக்கையின் தந்தை, மார் தோமாவின் நினைவுகளை சுமந்து வரும் இத் துக்ரானாத் திருவிழாவின் வேளையில், இம்மேய்ப்பு மடல் வாயிலாக உங்களோடு உரையாடுவதில் உள்ளபடியே மகிழ்கிறேன். இந்நாளை, சபைநாள் என்னும் பெயரில் பல ஆண்டுகளாக அனுசரித்து வருகிறோம். உயிர்த்தெழுந்த ஈசோவின் திருக்காயங்களை தரிசித்த போது மார் தோமா, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்று அறிக்கையிட்டார். அவரின் நற்செய்திப் பணியின் பயனாக நம்முடைய சபையும் உருவானது. மார்த்தோமாவைப் பற்றி மட்டும் நினைக்கும் நாளாக இதைச் சுருக்கி விடமுடியாது. இது உணர்வுகளோடு கலந்ததாக மாற வேண்டும். மார் தோமா சிந்திய இரத்தத்துளிகளை இதயத்தில் ஏற்று. நம்பிக்கையை அறிக்கையிட்டு, அந்நம்பிக்கையால் உறுதிப்படுவோம். மேலும் இது இறைப்பராமரிப்பிற்கு நன்றி சொல்லும் நாள். நற்செய்தி தரும் ஒளியாலும், மகிழ்ச்சியாலும் துணிவாலும் ஆண்டவர் மார்த்தோமா வழியாக நம்மை தமது அளப்பரிய ஆசிகளால் நிரப்பியுள்ளார்.

சீரோ-மலபார் திருச்சபையின் உயர் பேராயர் பொறுப்பை ஏற்றப்பின் முதல் முறையாக மே 2024இல் நான் உரோமைக்குச் சென்றேன். உலகளாவியத் திருச்சபையின் தலைவரானத் திருத்தந்தையை சந்தித்து, மரபுப்படி, அவரோடான மதிப்பையும் கீழ்ப்படிதலையும் தெரிவித்தேன். ஆயர்

பேரவையின் நிரந்தர உறுப்பினர்களும் நானுமாக, மே 13ஆம் தேதி அச்சந்திப்பை நடத்தினோம். திருத்தந்தை அவர்கள் உளமகிழ்வோடும் அன்போடும் வரவேற்றுப் பேசினார். எங்களை சந்தித்தப் போதும், பின்னர் சீரோ-மலபார் பிரநிதிகளோடு பேசிய போதும், அவர் நமது சபையைப் பற்றிப் பேசியவை, நமது சபைக்கான பெரிய அங்கீகாரமாக அமைந்தன. திருத்தந்தை நம்மோடு காட்டும் அன்புக்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், அவரின் உடல் நலனுக்காக இறைவனிடம் வேண்டவும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புக்குரியவர்களே, திருத்தந்தையை சந்தித்தப் போது அவர் பேசியவற்றை மையப்படுத்தி, சில சிந்தனைகளை இவ்வாண்டைய துக்ரான மற்றும் சபைநாளில் உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

நமது சபையின் மரபைப் பற்றி உணர்ந்து, அதைப் பற்றிப் பெருமை கொள்ள வேண்டும் என்று முதலாவதாக, நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். திருத்தந்தை பின்வருமாறு கூறினார்: "உங்களுடைய சபை தொன்மை வாய்ந்தது. இன்னுயிர் ஈந்து, நம்பிக்கையைப் பகிர்ந்த இந்தியாவின் திருத்தூதரான மார் தோமாவின் சான்று வாழ்வை அது அடிப்படையாகக் கொண்டது. திருத்தூதரின் படிப்பினையின் வாரிசுகளாகவும் காவலர்களாகவும் நீங்கள் விளங்குகிறீர்கள்." தனது நீண்ட கால வரலாற்றில், பல தடைகளைச் சந்தித்தப் போதும், நமது சபை; பேதுருவின் வாரிசுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தே இருந்தது. அதிலிருந்து எள்ளளவும் விலகவில்லை. இதைத் திருத்தந்தை பிரான்சிஸ் தமது உரையின் போது குறிப்பிட்டார். அடிபதறா நம்பிக்கை தான் இச்சபைக்கு உறுதியான ஆணிவேர். கத்தோலிக்கச் சமூக உறவை, பல்வேறு தியாகங்களினூடாக அது தக்கவைத்தது.

துன்பங்களின் வேளைகளில், நம்முடைய மூதாதையர்கள், திரு ஆட்சிப் பீடத்தை மதித்து அதற்குக் கீழ்ப்படிந்தார்கள். கீழ்ப்படிதல் வழியாக நம் திருச்சபை வளர்ச்சியடைந்தது. கீழைத் திருச்சபைகளுள் அதிகம் எண்ணிக்கைக் கொண்ட சபையாகவும், நற்செய்திப் பணியில் ஆர்வம் மிக்கதாகவும், அது பெருமையுடன் உயர்ந்து நிற்கிறது. சில பிரிவினைகளையும் கீழ்ப்படியாமையும் நாம் வரலாற்றில் சந்தித்திருக்கிறோம். அது இப்போதும் தொடர்கிறது என்பதே உண்மை. கீழ்ப்படிதல் என்பது

ஒரு விழுமியம். அது கத்தோலிக்கர்களின் வாழ்வோடு பிணைக்கப்பட்டது. திருச்சபையின் சட்டப்படி, கீழ்ப்படிந்து வாழ நாம் கடமைப்பட்டுள்ளோம். இன்னல்கள் மற்றும் இடையூறுகளின் வேளைகளிலும், நாம் திருத்தூது மரபில் இடையறாது நீடிக்க உதவிய கடவுளுக்கு நன்றி கூறுவோம். தலைமுறை தலைமுறையாக பரிமாறப்பட்டு நம்மை வந்தடைந்திருக்கும். இத்திருத்தூது மரபை பெரிய பொக்கிஷமாகக் கருதி, அதைப் பாதுகாப்பதோடு அடுத்த தலைமுறைக்கு கைமாற வேண்டியதும் நம்மேல் சுமத்தப்பட்ட பொறுப்பாக இருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

இரண்டாவதாக, உலகெங்கும் நாம் பரவிக் கிடக்கிறோம். அங்கெல்லாம் திருத்தொண்டுப் பணிகளையும் செய்து வருகிறோம். "உங்களுடைய சபை மக்கள் வெளிப்படுத்தும் 'உயிரோட்டமான' நம்பிக்கை, மற்றும் இறைப்பற்று, இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கும் அறியப்படுகிறது" என்று திருத்தந்தைக் கூறினார். இருபதாம் நூற்றாண்டு வரை, இந்தியாவில் கேரளாவிற்குள் முடங்கிக் கிடந்த இத்திருச்சபை, இன்று உலகெங்கும் அறியப்படும் சபையாக வளர்ச்சி அடைந்திருப்பது நமக்கு பெருமை சேர்க்கிறது. உலகின் பல்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்த மக்கள், ஆண்டவரின் மீது வைத்த நம்பிக்கையிலிருந்து விலகவில்லை என்பது மிகவும் பாராட்டத்தக்கது. புலம் பெயர்தல் மிகச்சாதரணமாக நடக்கும் இக்கால கட்டத்தில், திருத்தொண்டுப் பணியில் நம் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்தியாவிற்குள் சபை சமூகங்களையும் அமைப்புகளையும் உருவாக்க அனுமதி அளித்ததோடு, மத்திய கிழக்கு நாடுகளில் மேய்ப்புப் பணிசார்ந்த உதவிகளை அளிக்க வாய்மொழி அதிகாரத்தையும் அளித்தத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை நன்றியோடு நினைக்கிறோம். மத்தியகிழக்குப் பகுதிகளில் வாழும் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்காக, சபைசார்ந்த அமைப்பு விரைவில் அமைக்கப்படும் என எதிர்நோக்குவோம்.

வேலை, கல்வி மற்றும் மேம்பட்ட வாழ்வு ஆகியவற்றை எதிர்நோக்கி, நம் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்கிறார்கள். இத்தருணத்தில், நமது சபையின் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று. திருத்தந்தை அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார். "உரோமையின் ஆயராகிய நான் உங்களை ஊக்குவிப்பது நல்லதென

நினைக்கிறேன். நீங்கள் உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும், உங்கள் தவிச்சபையின் உறுப்பினராக நீடிப்பதில் கவனம் கொள்ள வேண்டும். அச்சபையின், திருவழிபாடு, இறையியல், ஆன்மீகம் மற்றும் பண்பாட்டு மரபு உங்கள் வழியாக பிரகாசித்து ஒளிர வேண்டும்." திருத்தந்தையின் இந்த அழைப்புக்கு செவி கொடுப்போம். சபையின் வழிபாட்டு முறை, மற்றும் நம்பிக்கை மரபை கட்டிக் காப்போம். மேய்ப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அருட்பணியாளர்களும் மற்றவர்களும், மக்களை கவனமுடன் நடத்தி, அவர்களை சபையின் அமைப்புகளின் பகுதியாக மாற்ற நிரந்தரமாக முயற்சிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சபைசார்ந்த உள்ளுணர்வை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, இறுக்கமான மனநிலைகளை விட்டொழிப்போம்.

மூன்றாவதாக, நம்முடைய குடும்ப உறவுகளையும், நம்பிக்கை பயிற்சியில் நாம் செலுத்தும் அக்கறையையும் பற்றி உங்களோடு பேச விழைகிறேன். நம்முடைய குடும்பங்களே நமது மாபெரும் சொத்து. சபை என்பது பல குடும்பங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பு எனலாம். இது ஆன்மீகம் மற்றும் கடின உழைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நம்பிக்கைப் பயிற்சி குடும்பங்களில் தொடங்கி, உறவியங்கள், பங்கு, என விரிவடைய வேண்டும். நம்பிக்கை என்னும் பாறையின் மீது குடும்ப உறவுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். அப்போது, அது புதிய பண்பாட்டுக் கூறுகளும் காலச்சூழலும் விடுக்கும் சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் ஆற்றல் பெறும். வாழ்வின் எச்சூழலிலும், குடும்பங்களும் தனிநபர்களும், நம்பிக்கையிலிருந்து பிறழாமல், 'ஈசோவே ஆண்டவர் அவரே மீட்பர்' என்று அறிக்கையிடும் நிலை, சபை முழுவதும் உருவாக வேண்டும்.

துறவற வாழ்வு மற்றும் குருத்துவ வாழ்வுக்கான இறையழைத்தல்கள் நமது சபையில் ஏராளமாக உள்ளன. கடவுள் அத்தகைய அருளை நம்மேல் பொழிந்துள்ளார். உலகின் பல்வேறு பகுதிகளில், திருத்தொண்டுப் பணியில் ஈடுபட்டிருக்கும் நமது சபை மாந்தர்களை இத்தருணத்தில் சிறப்பான முறையில் நினைவில் கொள்கிறேன். இறையழைத்தலை ஊக்குவிப்போம். திருத்தொண்டுப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இயன்ற வரை உதவுவோம். இறையழைத்தலின் விதைகளை ஊக்குவிப்பதில், அருட்தந்தையர்களும், துறவறத்தாரும் தனிக்கவனம்

செலுத்த வேண்டும். இறையழைத்தலின்பால் ஆர்வம் வெளிப்படுத்தும் பிள்ளைகளை உற்சாகப்படுத்தி, அவர்களுடன் உடன்பயணிப்பவர்களாக மாறுவோம். நமது சபையின் எதிர்காலம், இறையழைத்தலை ஏற்போரைச் சார்ந்து தான் இருக்கிறது என்பதை அனைவரும் நினைவில் கொண்டு செயல்பட கேட்டுக் கொள்கிறேன்.

இறை ஈசோவில் அன்பானவர்களே, கடவுள் நம்மை நிரந்தரமாகப் பராமரிக்கிறார். துன்பங்கள் மற்றும் இடர்களின் வேளையில், திருத்தந்தையின் வார்த்தைகள் நமக்குத் துணையாகட்டும். "இடர்கள் நேரும் போது, சோர்ந்து போகாதீர்கள். நம்பிக்கையற்றவர்களாக மாறிவிடாதீர்கள்." திருத்தூது மரபுமிக்க சபையின் உறுப்பினர்களாக இருக்கும் நாம் அதன் பெருமையை நெஞ்சில் சுமப்போம். கத்தோலிக்க சமூக உறவில் நீடிப்பதில் உள்ளபடியே மகிழ்வோம். வாழ்வின் சவால்களை எதிர்கொண்டு, நம்பிக்கையின் தீபம் ஏந்தி விண்ணகம் இலக்கெனக் கொண்டு முன்னேறுவோம். குடும்பங்களை காப்போம், நம்பிக்கை அங்கே அரும்பட்டும். நம்பிக்கைப் பயிற்சியை தளராமல் மேற்கொள்வோம். இளையோரை அரவணைப்போம்.

துக்ரானா மற்றும் சபைநாளின் வாழ்த்துகளை அனைவருக்கும் ஒருமுறை கூட தெரிவித்துக் கொள்கிறேன். அன்னை மரியா, புனித யோசேப்பு, திருத்தூதர் புனித தோமா, மற்றும் புனிதர்களின் பரிந்துரைகள் நமக்குத் துணை நிற்பவனவாக.

காக்கனாடு செயின்ட் தோமஸ் மவுண்டிலிருந்து ஜூன் 22, 2024 அன்று வழங்கப்பட்டது.

மார் ராஃபேல் தட்டில்,

சீரோ-மலபார் சபையின் உயர்பேராயர்




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

## "நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன. (உரோமையர் 10:15)"

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

### ஊக்குவிப்பாளர் கூடுகை

ஊக்குவிப்பாளர்களின் கூட்டம் ஜுலை 13, சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணி முதல் 6.30 மணி வரை கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் இயக்குனர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. இக்கூடுகையின் போது இயக்குனர் அருட்தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்று, இந்த வருடம் செயல்படுத்த வேண்டிய செயல்திட்டங்களை குறித்து பேசினார்கள். மேலும் இக்கூடுகையின் போது மறைக்கல்வி நிலையங்களை பார்வையிடுதலுக்கான படிவம் வழங்கப்பட்டது.

### தென்காசி மறைவட்ட மறைக்கல்வி நிலையங்களை பார்வையிடுதல்

தென்காசி மறைவட்ட மறைக்கல்வி நிலையங்களை பார்வையிடுதல் மற்றும் வகுப்புகள் புதூர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் தென்காசி மறைத்தொண்டு ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்களின் தலைமையில் மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை பிறின்ஸ் அவர்கள் முன்னிலையில் ஜுலை 21 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை நடைபெற்றது. தென்காசி மறைவட்ட மறைக்கல்வி நிலையங்களை பார்வையிட்டு அறிவுரைகள் வழங்குவதற்காகவும் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கவும் ஊக்குவிப்பாளர்கள் திரு. விஜயராஜன், திரு. செல்வகுமார், திரு. விஜயகுமார், திரு. வின்செண்ட் ராஜ் ஆகியோர் சென்றனர்.

### புதிய புத்தக அறிமுகப் பயிற்சி

காக்க நாடு மவுண்ட் செயின்ட் தாமஸ் இல் மறைக்கல்வியின் பதினொன்றாம் வகுப்பு புதிய புத்தக அறிமுகப் பயிற்சி ஒரு நாள் கருத்தரங்காக நடைபெற்றது. சீரோ மலபார் திருச்சபையின் மறைக்கல்வி மன்ற பொதுச்செயலாளர் அருட்தந்தை தோமஸ் மேல்வட்டத் அவர்கள் தொடக்க நிகழ்வில் அனைவரையும் வரவேற்றார்.

தலைமைஉரை நிகழ்த்திய உயர் பேராய ஆவண காப்பாளர் தந்தை அவர்கள் இன்றைய கால சூழலுக்கும் மாணவர்களின் திறமைக்கும் ஏற்ற வகையில் மறைக்கல்வி ஆசிரியர்கள் தங்களை தகுதிப்படுத்தி பயிற்றுவிக்க வேண்டும் என



கேட்டுக் கொண்டார்கள். மேலும் பதினொன்றாம் வகுப்பு புத்தகம் அச்சாகும் வரை கடந்து வந்த நிகழ்வுகளைப் பகிர்ந்தார். எல்லா மறை மாவட்டத்தில் இருந்தும் பிரதிநிதிகள் பங்கேற்றனர். பங்கேற்பாளர்களை குழுக்களாக பிரித்து புதிய புத்தகத்தின் பாடங்களை குழுக்களில் விவாதித்து அதன் சாராம்சத்தை மேடையில் விவரித்து கூறினர். அதுபோல மொத்த பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து வகுப்பு எடுப்பது எவ்வாறு என்பது குறித்து (Model Class) மாதிரி மறைக்கல்வி வகுப்புகள் நடத்தினார். Adv. ட்ரீசாவின் நன்றியுரையுடன் ஒரு நாள் கருத்தரங்கு நிறைவு பெற்றது. இக்கருத்தரங்கில் ஊக்குவிப்பாளர்களான அருள்சகோதரி அல்போன்ஸ் CMC திரு. மு. எட்வின்சன், திரு. சோனிக் ரீகன் மற்றும் ஆசிரியை திருமதி ஜெயராணி ஆகியோர் பங்கேற்றனர்.

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குனர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குனர்***

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**"சிறுபிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது." (மாற்கு *10 : 14*)**



குழந்தை ஈசோ இயக்கத்திலிருந்து ஜூன் மாதம் புனித தோமையாரின் திருவிழாவினை முன்னிட்டு குழந்தைகளுக்கு புனித தோமையாரின் படத்திற்கு வண்ணம் தீட்டும் போட்டி மாத செயல்பாடாக கொடுக்கப்பட்டது. எல்லா பங்குகளிலும் வண்ணம் தீட்டும் போட்டி நடத்தப்பட்டு அதிலிருந்து சிறந்த மூன்று படங்கள் தேர்வு செய்யப்பட்டு குழந்தை ஈசோ அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. எல்லா பங்குகளிலும் இவ்வியக்கம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அதற்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகின்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**இயக்குனர்**

**அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்**

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர்

இயக்கம் **SMYM**

**தேசத்தின் எதிர்காலம் இளைஞர்களே. அவர்களின் மீது நீங்கள் செய்யும் முதலீடு உங்கள் எதிர்காலத்தின் மீதான முதலீடு.**

**ஊக்குவிப்பாளர்கள் கூட்டம்**

ஜூலை 06, 2024 சனிக்கிழமை மதியம் 02.00 மணியளவில் ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று நடுவண் செயற்குழு ஆலோசகர் செல்வி சுபிலா உரையாற்றினார்கள்.



தொடர்ந்து, மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இளையோர்களை மையமாகக் கொண்டு ஊக்குவிப்பாளர்களுடன் கலந்துரையாடினார். மேலும் 5 கருத்துக்களை முன்வைத்து, விசுவாசத்தை இளையோர் புரியும் விதத்தில் கற்றுகொடுக்க வேண்டும் என்றும் காலத்தின் மாற்றத்திற்கேற்ப இளையோர்களை ஊக்கப்படுத்த அறிவுரை கூறினார்கள். பின்னர் இளையோர்களுடன் எப்பொழுதும் தொடர்பில் இருக்க வேண்டும் என்றும் மாதம் தோறும் பங்களவில் நடைபெறும் நிகழ்வுகளை ஊக்குவிப்பாளர்கள் அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். தொடர்ந்து மறைவட்ட அளவில் ஊக்குவிப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இறுதியாக இயக்குநர் தந்தையின் ஆசியுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## மறைவட்ட அளவிலான ஊக்குவிப்பாளர்கள் கூட்டம்

## மஞ்சாலுமூடு, சூசைபுரம், தக்கலை-பிலாங்காலை

மஞ்சாலுமூடு மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் கூட்டம் ஜூலை 17 புதன்கிழமை மாலை 4 மணியளவில் மஞ்சாலுமூடு ஆலய வளாகத்திலும், சூசைபுரம் மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் கூட்டம் ஜூலை 22 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணியளவில் சூசைபுரம் ஆலய வளாகத்திலும், தக்கலை-பிலாங்காலை மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் கூட்டம் ஜூலை 27, சனிக்கிழமை மாலை 4 மணியளவில் பிலாங்காலை புனித குழந்தை தெரசா ஆலய வளாகத்திலும் நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்ற அனைவரையும் மறைவட்ட இயக்குநர் தந்தையர்கள் வரவேற்று உரையாற்றினார்கள். பின்னர் இயக்குநர் தந்தை அவர்கள் இளையோர்களின் தற்போதைய நிலை குறித்த விழிப்புணர்வு கருத்துரை வழங்கினார்கள். தொடர்ந்து, இளையோர் இயக்க கூட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும் இயக்கத்தை வலுப்படுத்தும் விதமாக பல முடிவுகள் எடுக்கப்பட்டது. அனைத்து ஆலயங்களிலும் தவறாமல் இளையோர் இயக்க கூட்டம் நடைபெற ஆவனச் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து, மறைமாவட்ட செயற்குழு தேர்தலை முன்னிட்டு அனைத்து பங்குகளிலும் தேர்தல் நடைபெற வேண்டும் எனவும் மறைவட்ட அளவில் தகுதியும், திறமையும் உள்ள பொறுப்பாளர்களை அடையாளம் கண்டு தகுந்த தலைவர்களை உருவாக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டு இயக்குநர் தந்தையின் இறுதி ஆசியுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

## புனித அல்போன்சா நடைபயணம்

புனித அல்போன்சா திருவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு ஆண்டும் மறைமாவட்டத்தின் SMYM வழிகாட்டுதலின் கீழ் நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்திற்கு நடைபயணம் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டு ஜூலை 20 , சனிக்கிழமை காலை 6:30 மணிக்கு தக்கலை ஆயர் இல்லத்திலிருந்து ஆரம்பமானது. காலையில் அனைவருக்கும் ஆயர் இல்லத்தில் காலை உணவு வழங்கப்பட்டது. பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பரம்பில் அவர்கள் செபம் செய்து பயணத்தை தொடங்கி வைத்தார். இளையோர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், துணை இயக்குநர் அருட்தந்தை லின்டோ மற்றும் அருட்தந்தையர்கள், இளையோர்கள், அருட்சகோதரிகள் பக்தர்களுடன் இணைந்து திருத்தலம் நோக்கி நடந்தனர். நடைபயணமாக குளச்சல் சாலையிலிருந்து இளையோர்கள் மற்றும் பக்தர்களின் மற்றொரு குழுவும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். அருட்தந்தை லின்டோ தகிடியேல் அவர்கள் நவநாளை வழிநடத்தினார், அதைத் தொடர்ந்து



மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குனர் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த புனிதப் பயணத்தில் சுமார் 700 இளையோர் மற்றும் நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

**இவண்**
**அகில், செயலர்**

## புனித அல்போன்சா திருவிழா கொண்டாட்டங்கள்

புனித அல்போன்சா திருவிழா கொண்டாட்டம் ஜூலை 19, வெள்ளிக்கிழமை நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்தில் ஆரம்பமானது. புனித அல்போன்சா திருத்தல அதிபர் பேரருட்தந்தை சனில் பந்திச்சிறைக்கல் கொடி ஏற்றினார். புனித அல்போன்சாவின் பரிந்துரை வழியாக இறையருள் பெறுவதற்காக பத்து நாள் கொண்டாட்டங்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை புரிந்தனர். தக்கலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து குருக்கள் மற்றும் பக்தர்கள் பல்வேறு ஆன்மீக நிகழ்வுகளுக்கு, குறிப்பாக மறைவட்ட அளவிலான திருப்பலிகளின் போது கலந்து கொண்டனர். ஜூலை 26, வெள்ளிக்கிழமை குழித்துறை மறைமாவட்ட ஆயர் டாக்டர் மார் ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அன்றைய தினம் பல்வேறு வழிபாட்டு முறைகளைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் பங்கேற்றனர். ஜூலை 28, ஞாயிற்றுக்கிழமை திருவிழாவின் இறுதி நாள், நம்பிக்கையாளர்கள் மற்றும் அனைத்து பங்குகளிலிருந்தும் குருக்கள் காலை 9:30 மணிக்கு ஆலயத்தை அடைந்தனர். பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பரம்பில் அவர்கள் புனிதையின் நவநாளை வழிநடத்தினார். தொடர்ந்து இராமநாதபுரம் மறைமாவட்ட ஆயர் மார் பால் ஆலப்பாட் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலிக்குப் பிறகு, பவனி நடைபெற்றதோடு அனைவருக்கும் நேர்ச்சை உணவும் வழங்கப்பட்டது.

சிறுமலர் MISSION LEAGUE



# மிஷன் லீக் இயக்கம்

## சிறுமலர் மிஷன்லீக் இயக்கம்

### பொறுப்பாளர்கள் கூட்டம்

ஜூலை 07, ஞாயிற்றுகிழமை மாலை 5 மணிக்கு படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இயக்குனர் தந்தை பிரின்டோ குரியாஸ், இணை இயக்குனர் அருட்சகோதரி ஆன்கிரேஸ் FCC மற்றும் பொறுப்பாளர்கள் திரு.ஞானதாஸ், திரு.அஜு தோமஸ், திருமதி.லதா குமாரி, திருமதி. சினேக லதா ஆகியோர் கலந்துகொண்டு 14ஆம் தேதி நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தை (General Body meeting) சிறப்புற நடத்துவது பற்றி ஆலோசித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. தந்தை அவர்களின் இறுதி ஆசியுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

### ஆண்டுப் பொதுக்குழு கூட்டம்

(Annual General Body meeting)

ஜூலை 14, ஞாயிற்றுகிழமை சிறுமலர் மிஷன்லீக் இயக்கத்தின் பொதுக்குழு கூட்டம் மதியம் 2:30 மணியளவில் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் மூன்று பிரிவாக நடைபெற்று நிறைவு பெற்றது. 1.பெயர் பதிவு செய்தல், 2.மறைவட்ட அளவில் ஒன்றாகக்கூடி தங்கள் பங்குகளில் நடைபெறும் மிஷன்லீக் இயக்க செயல்பாடுகளை பகிர்ந்து கொள்ளல், 3.ஆண்டு பொதுக்கூட்டம் போன்ற மூன்று நிலைகள் ஆகும். பொதுக்கூட்டத்தின் தொடக்கமாக அருட் சகோதரி ஆன்கிரேஸ் FCC அவர்கள் தொடக்க ஜெபம் செய்தார்கள். திரு.ஞானதாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்க, பேரருட்தந்தை அவர்கள் மிஷன்லீக் இயக்கத்தின் சிறப்பு, பெருமை, அதன் வழியாக பெற்ற இறை அழைத்தல்கள், ஆசீர்வாதங்கள் பற்றி எடுத்துக் கூறி அனைவருக்கும் வாழ்த்து கூறி தலைமை உரையாற்றினார்கள். தொடர்ந்து இயக்குனர் தந்தை அவர்கள் 2024-2025 ஆம் ஆண்டின் செயல் திட்ட வரைவு அறிக்கையை சமர்ப்பித்தார். திருமதி.லதா குமாரி, செல்வி. ஜோசப்ஃபின் ஃபீற்றா றோஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக மறை மாவட்ட மிஷன்லீக் இயக்கத் தலைவர் திரு. அஜு தோமஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற, தந்தை அவர்களின் இறுதி ஆசீர் மற்றும் மிஷன் கீதத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.



**அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்**
**இயக்குநர்**

## SML - வருடாந்தர பொதுக்குழு கூட்டம்

ஜூலை 14, ஞாயிற்றுக்கிழமை சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் (SML) வருடாந்திர பொதுக்குழு கூட்டம் பிற்பகல் 2:30 மணிக்கு படந்தாலுமூட்டில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் நடந்தது. மறைவட்ட இயக்குனர்கள், மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள், அமைப்பாளர்கள் மற்றும் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த மாணவ பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பரம்பில் அவர்கள் இந்நிகழ்விற்கு தலைமை தாங்கினார். பங்குகளில் எடுக்கப்பட்ட மிஷன் வசூல் கூட்டத்திற்கு கொண்டு வரப்பட்டது. இப்பொதுக்குழு கூட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்பட வேண்டிய செயல் திட்டங்களை தயாரித்ததோடு; மற்றும் திருச்சபை அளவிலான நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்தது.

## CRI Recollection சங்கமம்

அருட்சகோதரிகளுக்கான தியானம் ஜூலை 13, சனிக்கிழமை சங்கமத்தில் நடைபெற்றது. அருட்தந்தை ஜார்ஜ் களங்கர SDB தியான உரையை வழிநடத்தினார். அதைத்தொடர்ந்து ஆராதனை மற்றும் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. சுமார் 80 அருட்சகோதரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தொடர்ந்து அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## மார்தோமா திருநாள்

ஜூலை 2, செவ்வாய்க்கிழமை கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்களின் பெயர் கொண்டவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பெயர் கொண்டவிழா கொண்டாடும் அருட்தந்தை மற்றும் பேரருட்தந்தைக்கு களப்பணியாளர்கள் பாடல், கவிதைகள், வாழ்த்துரை வழியாக வாழ்த்துகளைத் தெரிவித்தனர். கூட்டத்தில் துணை இயக்குநர் அருட்தந்தை சுபின், நிதி நிறுவனப்பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## நன்றியும் அறிமுகமும்

ஜூலை 27, சனிக்கிழமை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் ஐம்பத்து எட்டு வயது நிறைவடைந்த பணியாளர்களின் பணி நிறைவு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர் திருமதி மேரி பிளாரன்ஸ் உட்பட களப்பணியாளர்கள் திருமதி.பிளாறி அமலா, திருமதி.அருளம்மா, திருமதி.மேரி, திருமதி.விமலா மற்றும் திருமதி.மரிய செல்வம் ஆகியோர் பணி ஓய்வு பெற்றனர். பல்வேறு பகுதிகளில் வளர்ச்சி பணிகளை செவ்வனே செய்து ஏழை எளியோரின் நல்வாழ்விற்காக தனது பணிகளை திறம்பட பணியாற்றி பணிநிறைவு பெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து "அலைகள்" என்ற புதிய இதழ் பேரருட்தந்தை. தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்களால் வெளியிடப்பட்டது. புதிய களப்பணியாளர்களை KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

## C.L.F கூட்டம்

ஜூலை 26, வெள்ளிக்கிழமை வயலின்கரை மையத்தின் சுய உதவிக்குழுக்களின் C.L.F கூட்டமானது வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயத்தில் களப்பணியாளர் திருமதி சுனிதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் புதிய C.L.F பொறுப்பாளர்கள் திருமதி. ஜாண் கெமினா

தலைவராகவும், திருமதி ஜெனிலா மேரி செயலராகவும் திருமதி.மேபல் பொருளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இக்கூட்டத்தில் அத்தப்பூ போட்டி மற்றும் போதை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. 17 நபர்கள் கலந்து கொண்டனர்.



## போதைப் பொருட்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு இணைந்து ஜீலை 20, சனிக்கிழமை தெற்றிவிளை பகுதியிலும் ஜீலை 21, ஞாயிற்றுக்கிழமை பென்கிரி மையத்திலும் நடைபெற்றது. இந்நிகழ்வில் KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை சுபின் அவர்கள்; போதைப் பொருட்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் என்ற தலைப்பில் வகுப்பை வழிநடத்தினார்கள். மது போதையால் ஏற்படும் உடல், மனநலப் பாதிப்புகள், பொருளாதார இழப்பு, போதையில்லா சமுதாயம் உருவாக்குதல் குறித்தும், மது போதையால் பாதித்தவர்களுக்கு மறு வாழ்வு அளித்து மீட்பது பற்றியும் விளக்கி கூறினார்கள். இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



**அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்**
**செயலர்**




## இல்வாழ்வு இயக்கம்

### பங்குதளங்கள் பார்வையிடுதல்

ஜூலை 07, ஞாயிற்றுக்கிழமை இயக்குனர் அருட்தந்தை ஜிம்மி மற்றும்



மறைமாவட்ட பொறுப்பாளர்கள் இணைந்து தக்காளிவிளை மாதர் ஜோதிஸ் இயக்கத்தை பார்வையிட்டு நிறைகுறைகளை கேட்டறிந்து அவர்களோடு கலந்துரையாடினார்கள்.

### முதியோர் இல்லம் சந்திப்பு

ஜூலை 07, ஞாயிற்றுக்கிழமை இயக்குனர் தந்தை மற்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் இணைந்து சகாயநகர் ஒசானாம் முதியோர் இல்லத்தை சந்தித்து முதியோர்களிடம் உரையாடினர்.

### மஞ்சாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்களின் கூடுகை

மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை ஜோஸ்வயலில் அவர்கள் தலைமையில் ஜூலை 21, ஞாயிற்றுக்கிழமை மஞ்சாலுமூடு மறைவட்டத்தின் கீழ் செயல்படும் பங்கு தளங்களின் பொறுப்பாளர் மற்றும் ஊக்குவிப்பாளர்களின்

கூட்டம் நடத்தப்பட்டது. கூடுகையில் வரவிருக்கும் நிகழ்வுகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

## Global meeting

செயின்ட் தாமஸ் மவுண்ட் காக்கநாட்டில் வைத்து நடைபெற்ற குளோபல் கூட்டத்திற்கு தக்கலை மறைமாவட்ட பொறுப்பாளர்கள், இயக்குனர் தந்தை



ஜிம்மி தெக்கேகடுமத்தில் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தின் போது 2024 ஜனவரி முதல் ஜூன் வரையுள்ள செயல்பாடுகள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

### மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளையில் செயல்படும் மது அடிமை மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மன நோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்துதலும் ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் நடைபெற்று வருகின்றது. முதல் மற்றும் மூன்றாவது திங்கள் கிழமையில் மதியம் 12 மணி அளவில் மன நலமருத்துவர் வருகை புரிவார். மருத்துவர் வருகை தரும் நாட்களில் பலர் ஆலோசனை பெற்றுச் செல்கின்றனர். இம்மையத்தில் இருந்து சிகிச்சை பெற்றவர்கள் பலர் நலமடைந்துள்ளனர்.

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்

**இயக்குநர்**




# வின்சென்ட்-தே-பவுல் சபை

## தக்கலை மத்திய பேரவையின் ஆண்டுவிழா

தக்கலை மத்திய பேரவையின் 27-வது ஆண்டுவிழா ஜூலை 14, ஞாயிற்றுக்கிழமை நித்திரவிளை ஜெயமாதா மறைவட்ட ஆலயத்தில் நடந்தது. முதலாவதாக, பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து, பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் தலைமைப்பணியாளர் சகோ.றாபி அவர்கள் வரவேற்புரை கூறினார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் தலைமை தாங்கி வெள்ளிவிழா, பொன்விழா காணும் உறுப்பினர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களை கௌரவித்து பரிசு வழங்கினார். பொதுக்கூட்டத்தின் எல்லா நிகழ்வுகளையும் நித்திரவிளை வட்டார சபை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.



## மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் தேர்வு

மஞ்சாலுமூடு வட்டார சபைக்கு புதிய தலைவராக மாலைக்கோடு சகோ.ஜோஸ் அவர்கள் ஜூலை 21, ஞாயிற்றுக்கிழமை தேர்வுசெய்யப்பட்டார். 6 வருட காலம் மஞ்சாலுமூடு வட்டார சபையை சிறப்புடன் வழிநடத்திய சகோ.ஜார்ஜ் வின்சென்ட் அவர்களுக்கு நன்றியும், பாராட்டுக்களும்.

*சகோ. D.Pஷாஜி*
*தகவல் தொடர்பு அலுவலர்*

# மரியாயின் சேனை
# தக்கலை கொமித்சியம்

## மரியே வாழ்க...

2024 ஜூலை 21, ஞாயிற்றுக்கிழமை அண்ணிக்கரை புனித மத்தேயு ஆலயத்தில் ரோஜா மிஸ்டிகா மாதா என்ற புதிய பிரசிடியம் தொடங்கப்பட்டது. சகோ.ஷீமா மோள் தலைவராகவும், சகோ.சரோஜா துணைத் தலைவராகவும், சகோ.மேரி தீபா செயலராகவும், சகோ.றோஸ்லெட் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டார்கள். மேலும் 12 சகோதரிகள் சேனையில் சேர்ந்தார்கள். அவர்களுக்கு தக்கலை கொமீத்சியம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தொடங்க அனுமதி அளித்த பங்குதந்தை அருட்தந்தை சுமேஷ் அவர்களுக்கும், தொடங்க முயற்சி எடுத்த தொடர்பாளர் சகோ.செலின் மேரி அவர்களுக்கும், ஆன்மீக பாதையில் சிறப்பாக வழிநடத்தி வரும் கொமீத்சிய பாசமிகு ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றனிஜோஸ் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**அன்னையின் பணியில்**
**சகோ.R. தோமஸ் பன்னீர்செல்வம்**

---

## SMSM பொன்விழா கொண்டாட்டம் சென்னை

Seva Missionary Sisters of Mary (SMSM) சபை ஜூலை 24, 2024 அன்று சென்னை மணலி நியூ டவுனில் உள்ள பொது இல்லத்தில் சபையின் பொன்விழாவைக் கொண்டாடியது. இந்த சபை பேரருட்தந்தை ஜான் கொட்டாரம் அவர்களால் 1974 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் தேதி "கிறிஸ்து அறியப்படாத இடங்களில் அவரை அறியவும் நேசிக்கவும்" என்ற கருத்துடன் நிறுவப்பட்டது. இது சென்னை-மைலாப்பூர் மறைமாவட்டத்தின் கீழ் உள்ள ஒரு சபை ஆகும். தக்கலை மறைமாவட்டத்தில், கிறிஸ்துராஜபுரம் பங்கு மற்றும் ஆங்கிலவழிக் கல்விக்கூடத்தில், இவ் அருட்சகோதரிகள் 2010 முதல் வாடகை வீட்டில் வசித்து தங்கள் மதிப்புமிக்க சேவையை செய்து வருகின்றனர்

# மறைமாவட்டச் செய்திகள்

## இளங்குருக்களுக்கான உருவாக்கல் பயிற்சி

2024, ஜூலை 29 மற்றும் 30 ஆகிய நாட்களில் சங்கமத்தில் இளங்குருக்களுக்கான இரண்டு நாள் உருவாக்கல் பயிற்சி நடைபெற்றது. இளங்குருக்களான அருட்தந்தையர்கள் அபிலாஷ், ஷிஜோ, டோஜி, ஜோஸ் மோன், மகேஷ், ஜார்ஜ்குட்டி, பிரின்ஸ், அஜின் C , லிஜு, லின்டோ மற்றும் சாஞ்ஜோ ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். நிகழ்வுகளை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தொடங்கி வைத்தார். முதல் நாள், அருட்தந்தை பீட்டர் ஆரோக்கியராஜ் SDB அவர்கள், குருத்துவ வாழ்க்கை, மறைபரப்புபணி மற்றும் புதிய தலைமுறை குருக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த அமர்வை நடத்தினார். மாலையில், கியூரியா உறுப்பினர்கள், ஆயருடன் இணைந்து, இளங்குருக்களை சந்தித்தனர். ஜூலை 30, புதன்கிழமை பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் திருச்சபை சட்டம் என்னும் தலைப்பில் வகுப்பு நடத்தினார், அதைத் தொடர்ந்து பேரருட்தந்தை ஜோன்சிலால் அறக்கபரம்பில் அவர்கள் இளங்குருக்களின் நிதி கையாள்தல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான அனைத்து சந்தேகங்களுக்கும் பதிலளித்தார்.

## KKSSS: Changing the Way We Care Project Review

CRS நிதியுதவியுடன் Changing the Way We Care திட்டம், கைவிடப்பட்ட குழந்தைகளை மறுபடியும் குடும்பங்களில் இணைத்தல், அரசு மற்றும் தனியார் சேவைத் திட்டங்கள் இக்குடும்பங்களுக்கு ஆதரவு வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வருடாந்தர மதிப்பாய்வின் ஒரு பகுதியாக, ஜூலை 23,2024 அன்று CRS குழு காட்டாத்துறை பங்குகளுக்குட்ட பகுதிகளை பார்வையிட்டது. அங்கு இத்திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. KKSSS நிர்வாகம், காட்டாத்துறை பங்குத்தந்தை அபிலாஷ், பங்கு மக்கள் வின்சென்ட் தே பவுல் சபை மற்றும் இதர பக்த சங்கங்களின் உறுப்பினர்களின் உதவியுடன் பிள்ளைகளின் படிப்புக்கு உதவுதல், தேவைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றைச் செய்து வருகிறது. மறுஆய்வுக் குழுவில் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில், அருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல், KKSSS இயக்கத்தைச் சார்ந்தவர்கள். அருட்தந்தை செலஸ்டின், திட்டத்தின் CRS ஆலோசகர் மற்றும் CRS பிரதிநிதிகள் மேற்கொண்டனர். தற்போது இத் திட்டத்தின் மூலம் 300 க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஆதரவு பெறுகின்றனர்.

# மறைவட்டச் செய்திகள்

## மஞ்சாலுமூடு

### புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு

முழுக்கோடு, புனித தோமையார் ஆலய திருவிழா 2024 ஜூன் 30 முதல் ஜூலை 07 வரை 8 நாள்கள் நடைபெற்றது. பங்குத்தந்தை சந்தோஷ் கையாலப்பறம்பில் CMI அவர்கள் கொடியேற்றி விழாவினை தொடங்கி வைத்தார்கள். திருவிழாவின் மூன்றாம் நாள் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் தலைமையில் 8 குழந்தைகளுக்கு முதல் திருவிருந்து வழங்கப்பட்டது. நான்காம் நாள் நற்கருணை ஆராதனையும், குமரி இளையோர் கலை இலக்கிய பேரவையின் நகைச்சுவை பட்டிமன்றமும் நடைபெற்றது. ஆறாம் நாள் இளையோர் இயக்க ஆண்டுவிழாவும், ஏழாம் நாள் மறைக்கல்வி மிஷன்லீக் மற்றும் குழந்தை





ஈசோ இயக்க ஆண்டு விழாவும் நடைபெற்றது. திருவிழாவின் அனைத்து நாட்களிலும் அன்பின் விருந்து நடைபெற்றது. திருவிழாவின் ஆயத்தமாக ஜூன் 27,28,29 ஆகிய மூன்று நாட்கள் அருட்தந்தை அகஸ்டின் மெமோங்கரில் VC அவர்கள் தலைமையில் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது.

### புனித பெனடிக்ட் ஆலயம் – பென்கிரி

பென்கிரி, புனித பெனடிக்ட் ஆலய குடும்ப விழா ஜூலை 11, 2024 முதல் ஜூலை 14, 2024 வரை நடைபெற்றது. விழாவினை பேரருட்தந்தை தோமஸ் பௌத்துபறம்பில் அவர்கள் கொடியேற்றி துவங்கி வைத்தார்கள். திருவிழாவின் இறுதி நாளாகிய ஜூலை 14, ஞாயிற்றுக்கிழமை அருட்தந்தை ஜேம்ஸ்

பன்னாங்குழி, அருட்தந்தை ஜார்ஜ் கண்டத்தில் ஆகியோர் இணைந்து ராசாத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். குரு மாணவர்களும் பாடகற்குழுவும் திருப்பலிக்கு உதவி செய்தார்கள். புதிதாக ஒரு குடும்பம் திருவருட்சாதனம் பெற்று திருச்சபையின் உறுப்பினர்கள் ஆனார்கள். நாரத்தம் குழி வரை பவனி நடைபெற்றது. செண்பகத் தரிசு பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு ரசல் ராஜ் அவர்கள் பவனிக்கு தலைமை தாங்கினார்.





## களியல்

### புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

ஜூலை 05, வெள்ளிக்கிழமை மாதர்ஜோதிஸ் தாய்மார்கள் மற்றும் மறைக்கல்வி குழந்தைகள் இணைந்து நற்கருணை ஆராதனை நடத்தினர். ஜூலை 26, வெள்ளிக்கிழமை புனித அல்போன்சம்மாவின் திருநாள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

புனித தோமையார் திருவிழாவை முன்னிட்டு ஜீலை 3, புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் திருப்பலி நடைப்பெற்றது. தொடர்ந்து ஜூலை 7 ஞாயிற்றுகிழமை திருப்பலிக்கு பின் மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றது. ஜீலை 26, வெள்ளிக்கிழமை புனித அல்போன்சா திருவிழா சிறப்புத்திருப்பலி மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. மிஷன்லீக் மாணவர்கள் இணைந்து ஜீலை 28, ஞாயிற்றுகிழமை நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

### திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்

பள்ளிக் கோணம் திரு இருதய ஆலயத்தில் புனித தோமையார் தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. விழாவின் போது புனித தோமையாரின் வாழ்க்கை வரலாறு வாசிக்கப்பட்டு அதிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. ஜூலை 21, ஞாயிற்றுக்கிழமை மறைக்கல்வி மாணவமாணவியர்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு CMC அருட்கன்னியர்களால் நடத்தப்பட்டது

## சூசைபுரம்

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம், சூசைபுரம்

ஜூலை 3, துக்ரானாத் திருநாள் திருப்பலியானது மாலை 5.45 மணிக்கு நடைபெற்றது. ஜூலை 7, புனித தோமையார் திருவிழா மறைக்கல்வி மாணவர்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாணவர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட 10 நிமிடத்தில் புனித தோமையார் குறித்த பல்சுவை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர். மிகச் சிறந்த குழுவிற்கு பரிசு வழங்கப்பட்டது. ஜூலை 18 முதல் 26 முடிய ஒன்பது நாட்கள் நடைபெற்ற புனித அல்போன்சம்மா சிறப்பு நவநாள் ஜெபத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஒன்பதாவது நாள் இறுதியில் புனித அல்போன்சம்மா உறவியத்தினரால் தயாரிக்கப்பட்ட நேர்ச்சை அப்பம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. ஜூலை 20 , புனித அல்போன்சா திருத்தலம் நோக்கிய நடை பயணம் காலை 6.15 மணிக்கு ஆலயத்திலிருந்து ஆரம்பமானது. இளையோர்கள், குழந்தைகள், பெரியவர்கள் அனைவரும் ஆலயத்திலிருந்து புறப்பட்டு, அம்மாண்டிவிளை சென்று அங்கிருந்து தங்கள் நடை பயணத்தை மேற்கொண்டனர்.

ஜூலை 21 - அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி அவர்களின் பிறந்த நாள் விழா பங்கில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பங்கு மக்கள் வாழ்த்துரை வழங்கியும் வாழ்த்து பாடல் பாடியும் பூங்கொத்து மற்றும் பரிசுகள் வழங்கியும் தந்தை அவர்களுக்கு தங்களது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். ஜூலை 26 , புனித அன்னாள் சுவக்கீன் திருவிழா தாத்தா பாட்டிகள் தினமாக பங்கில் கொண்டாடப்பட்டது. அன்று மாலை நடைபெற்ற சிறப்பு திருப்பலிக்குப் பின்னர் குழந்தைகள் தங்களது தாத்தா பாட்டியருக்கு அன்பு பரிசுகளை வழங்கி வாழ்த்தினர்.

## கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

ஜூலை மூன்றாம் தேதி துக்ரானா திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 6:30 மணிக்கு ஆடம்பர திருப்பலியைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மற்றும் நேர்ச்சை உணவும் வழங்கப்பட்டது. ஜூலை மாதம் எல்லா வெள்ளிக்கிழமையும் மாலை 6:30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. மூன்றாவது வெள்ளியான ஜூலை 19 ஆம் தேதி சீனாய் தியான இல்ல இயக்குனர் அருள்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் தியானமும் இரவு நேர்ச்சை உணவும் வழங்கப்பட்டது. ஜூலை



28 ஆம் தேதி பங்கு பேரவை கூடுகை பங்குத்தந்தை அருள்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாதம் பத்து நாட்கள் புனித அல்போன்சா நவநாள் பங்கில் சிறப்பாக நடைபெற்றது. ஜூலை 17ஆம் தேதி மரியாவின் சேனை சார்பில் ஒரு நாள் திருப்பயணம் நடைபெற்றது. 75 வயதையும் கடந்து பங்கில் வின்செந்திய பணியாற்றும் சகோதரர்கள் 3 நபர்களுக்கு மத்திய சபை சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

## புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை

ஜூலை 03, துக்ரானா திருவிழாவன்று மாலை 6.00 மணிக்கு ஆடம்பரத் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. ஜூலை 14, ஞாயிற்றுக்கிழமை இளையோர்கள் சார்பில் மறைமாவட்ட அளவில் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. ஜூலை 16,17,18 ஆகிய தேதிகளில் பங்கு திருவிழாவை முன்னிட்டு அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது.

ஜூலை 19, வெள்ளிக்கிழமை கொடி மரம் மற்றும் கற்சிலுவை குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு,

பங்குதந்தை டோஜி கொழுவகண்டத்தில் அவர்களால் திருவிழா திருக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. ஜூலை 26 வெள்ளிக்கிழமை பாதுகாவலர் திருவுருவ பவனி நடைபெற்றது. ஜூலை 27 சனிக்கிழமை பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்களால் முதல் திருவிருந்து திருப்பலி நடைபெற்றது.



## பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்.

பாத்திமாபுரம், பாத்திமா அன்னை ஆலயத்தில் ஜூலை 3 புதன்கிழமை புனித தோமையார் திருநாள் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி அவர்கள் தலைமையில் ஆடம்பரத் திருப்பலி நிறைவேற்றப்பட்டு கொண்டாடப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து இனிப்பு வழங்கப்பட்டது. ஜூலை 5, 2024 முதல் வெள்ளிக்கிழமை திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனையுடன் ஒப்புரவு திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. ஜூலை 21, ஞாயிற்றுக்கிழமை அருட்சகோதரி ஆன்சிட் அவர்களின் பெயர் கொண்ட திருநாள் கேக் வெட்டி பரிசுகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

## புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

மாதாபுரம் தூய தோமையார் ஆலய திருவிழாவை முன்னிட்டு 3 நாட்கள் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. ஜூலை 3, 2024 பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களால் கொடியேற்றப்பட்டு திருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து, ஜூலை 7, 2024 வரையுள்ள நாட்களில் பங்கின் பாதுகாவலர் திருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இறுதி நாளில் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் இராசைத் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது.

# நித்திரவிளை

## ▶ புனித ஜார்ஜியார் திருத்தலம் – முன்சிறை

### புனித தோமையார் தினம்

ஜூலை 03, புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஜெபமாலையுடன் ஆடம்பரத் திருப்பலி ஆரம்பமானது. திருப்பலியில் சிலுவை முத்தம் செய்தல் முக்கிய பகுதியாக இடம்பெற்றது. அனைத்து இறை மக்களும் இவ்வழிபாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஜூலை 07, ஞாயிற்றுக்கிழமை புனித தோமையார் தினவிழா மறைக்கல்வி மாணவர்களால் சிறப்பிக்கப்பட்டது. அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தி தோமையாரின் விசுவாச வாழ்வை பகிர்ந்து கொண்டனர். அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் இந்நிகழ்விற்கு தலைமையேற்று ஆசிரியுரை வழங்கி சிறப்பித்தார்கள். அருட்சகோதரி கிறிஸ்டின் SD அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.



ஜூலை 21, ஞாயிற்றுக்கிழமை குழந்தை ஈசோ மாணவர்களுக்கான வண்ணம் தீட்டுதல் போட்டி பங்களவில் நடைபெற்றது. குழந்தை ஈசோ இயக்க அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டு போட்டிகளைச் சிறப்பித்தனர். ஜூலை 27, சனிக்கிழமை புனித அல்போன்சம்மாவின் நவநாளும் சிறப்பு திருப்பலியும் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. எல்லா இறை மக்களும் கலந்து கொண்டு திருப்பலி ஒப்புக் கொடுத்து ஜெபித்து அல்போன்சம்மா வழியாக இறை ஆசீர் பெற்று மகிழ்ந்தனர்.

## ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

ஜூலை 03 , புதன்கிழமை மாலை மிக ஆடம்பரமாக புனித தோமையார்

திருநாள் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது. குறிப்பாக அனைத்து தாய்மார்களும் கலந்துகொண்டு ஜெபங்கள், விவிலிய வாசகங்கள் வாசித்து சிறப்பித்தனர்.

### ▸ அமல மரியா ஆலயம்– சீனிவிளை

ஜூலை 03 , புதன்கிழமை மாலை ஆடம்பரமாக புனித தோமையார் திருநாள் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது. மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து மறைக்கல்வி சார்பில் விழாவாக கொண்டாடினர். குழந்தை ஈசோ மாணவர்களின் வண்ணம் தீட்டுதல் போட்டி பங்களவில் நடைபெற்றது. குழந்தை ஈசோ இயக்க அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டு போட்டிகளைச் சிறப்பித்தனர்.

## தக்கலை – பிலாங்காலை

### ▸ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

ஜூலை 13, இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலியைத் தொடர்ந்து ஆராதனை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. புனித அல்போன்சா திருநாளை முன்னிட்டு திருப்பலி மற்றும் நவநாள் கொண்டாடப்பட்டது. இறுதி நாளன்று தேர்பவனி நடைபெற்றது. உலக தாத்தா பாட்டி தினத்தன்று திருப்பலி முடிந்தவுடன் அருட்தந்தை அவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்த தாத்தா, பாட்டிகளுக்கு ஆசி வழங்கி ஜெபிக்கப்பட்ட உத்தரியம் வழங்கினார்கள். ஜூலை 28 ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் இருந்து புனித அல்போன்சா திருத்தலம் நோக்கி காலை 6 மணிக்கு பங்குதந்தையின் ஆசீர்வாதத்துடன் ஆலய பக்தர்கள் நடைபயணம் சென்றனர்

### ▸ புனித சூசையப்பர் ஆலயம் –தடிக்காரன்கோணம்

தடிக்காரன்கோணம் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. முதல்நாள் திருப்பலியில் குருகுல முதல்வர் கலந்து கொண்டு சிறப்பித்தார். இறுதி நாள் அன்பின் விருந்து நடைபெற்றது. ஏராளமானவர்கள் திருப்பலியில் கலந்து கொண்டனர். முதியவர் ஒருவர் திருமுழுக்கு பெற்றுக் கொண்டார். அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை அருட்தந்தை குரியன் கோயிப்புறம் முன்னின்று நடத்தினார்.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

# தென்காசி மறைத்தளம்

## புனித தோமையார் ஆலயம் புதூர்

புனித தோமையாரின் திருவிழாவை முன்னிட்டு ஜூலை மாதம் 1,2,3 தேதிகளில் ஆலயத்தின் திருவிழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. இறுதி நாளில் அருட்தந்தை தோமஸ் தக்கலை மற்றும் அருட்தந்தை ஜோண் ஜோஸப் ஆகியோரின் தலைமையில் திருவிழா திருப்பலி நிறைவேற்றப்பட்டது.



## மாதாந்தர தியானம்

ஜூலை 17, புதன்கிழமை காலை 9.30 மணியளவில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது. மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் மாதாந்தரத் தியான உரை மற்றும் ஆராதனையை வழிநடத்தினார். ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. இறுதியில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அனைத்து பங்குகளிலிருந்தும் அருட்கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## இளையோர் இயக்கம்

இளையோர் இயக்கம் சார்பாக ஜூலை மாதம் 20 ஆம் தேதி நடத்தப்பட்ட அல்போன்சா நடைபயணத்திற்கு தென்காசி மறைத்தளத்திலிருந்து 17 இளையோர்கள் தக்கலைக்கு சென்று மிக உற்சாகமாக நடைபயணத்தில் பங்கெடுத்தனர்.

## புனித அல்போன்ஸா திருவிழா

ஜூலை மாதம் 28 ஆம் தேதி புனித அல்போன்ஸா திருவிழாவில் பங்கெடுக்க நாகர்கோவிலுக்கு தென்காசி மறைத்தளத்திலிருந்து 80-ற்கும் மேற்பட்டோர்



சென்று பக்தியுடனும், உற்சாகத்துடனும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர்.

**மறைக்கல்வி – கருத்தரங்கு**

மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கான கருத்தரங்கு ஜூலை மாதம் 21 ஆம் தேதி பார்டரில் வைத்து நடைபெற்றது. தக்கலை மறைமாவட்டத்தை சார்ந்த ஊக்குவிப்பாளர்கள் திரு.விஜயராஜன், திரு விஜயகுமார் , திரு வின்சென்ட் ராஜ், திரு செல்வ குமார் ஆகியோர்கள் வருகை தந்து அமர்வுகளை நடத்தினர். மறைத்தள மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். ஆசிரியர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் தனித்தனியாக அமர்வுகள் நடத்தப்பட்டது.

# வரவிருக்கும் நிகழ்வுகள்

புனித வியானி தின கொண்டாட்டம், இளங்குருமடம் – ஆகஸ்ட் 03

உயர் பேராயரின் அதிகாரப்பூர்வ சந்திப்பு – ஆகஸ்ட் 10-11

அருட்தந்தை மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம்
படந்தாலுமூடு – ஆகஸ்ட் 10

சீரோ-மலபார் உயர் பேராய மாமன்றம் – ஆகஸ்ட் 22-25

| MONTHLY AGENDA – AUGUST 2024 | | | |
|---|---|---|---|
| DAT | DAY | TIME | EVENTS |
| 2 | Fri | 02.00 am | **KKSSS :** Cluster Meeting of Save a Family Program at Kathiravan Colony, Tenkasi<br>**KKSSS :** SHG Awareness Class @ Marappady |
| 3 | Sat | 09.30 am | **Vianney Day Celebrations at Minor Seminary**<br>**Alphonsa Academy Inauguration @ Nagercoil** |
| 4 | Sun | 02.30 pm<br>03.00 pm | **VP :** CC Meeting @ Padanthalummoodu<br>**SMYM :** Youth Forane Animators Meet @ Nithiravilai and Padanthalummoodu<br>**SMYM :** Youth forane leaders election @ Manjalummoodu<br>**Chapel Blessing** @ Chempagatharisu |
| 8 | Thu | 02.00 pm | **KKSSS : CLF Meeting @ Karode** |
| 10 | Sat | 12.30 pm<br>04.00 pm | **Major Arch Bishop's Visit**<br>**Reception @ Thuckalay Bishop's House Priests and Religious sangamam and honoring the Jubilarians @ Padanthalummoodu** |
| 11 | Sun | 08.00 am<br>02.00 pm | **Visit to Parishes and Institutions of the Diocese**<br>**Diocesan reception and Holy Qurbana @ Nithiravilai** |
| 12 | Mon | 10.00 am<br>03.00 pm | Inter Diocesean Meet @ **Changanacherry**<br>**UCC :** Monthly Meeting |

| | | | |
|---|---|---|---|
| 15 | Thu | 02.30 pm<br>10.00 am | **SMYM :** Youth Forane Animators Meet @ Kaliyal and Arukani<br>**KKSSS :** Independence day celebration @ Marappady |
| 17 | Sat | 10.00 am<br>10.00 am<br>03.00 pm | **Mission Leaugue National level coordinators meeting @ Bishop's House**<br>**St. Alphonsa Academy and Award function @ Nagercoil**<br>**Uravium Cordinators Meeting @ Bishop's House** |
| 18 | Sun | 02.00 pm<br>02.30 pm | **Manjalummoodu -** Kaliyal Forane Executive Meeting<br>**SMYM :** Youth forane leaders election @ Thuckalay-Plankalai |
| 19 | Mon | **02.00pm**<br>**03.00pm** | **Syro Malabar Bishop's Synod starts @ Kakkanad**<br>**KKSSS :** Cluster Meeting of Save a Family Program @ Puliyarai<br>**UCC :** UCC Karungal Monthly Vattaram Meeting |
| 21 | Wed | 10.00 am | **KKSSS :** Palliative Care review meeting @ Vayalinkarai |
| 24 | Sat | 02.00 pm<br>02.00 pm | **UV : Uraviyam Forane Animators Meeting**<br>**KKSSS : SHG Awareness Class @ Palugal** |
| 25 | Sun | 02.30 pm | **SMYM : Youth forane leaders election @ Nithiravilai and Padanthalummoodu** |
| 31 | Sat | 10.00 am | **KKSSS : Monthly review meeting @ Kalluvilai** |

**FR. THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS**

## BISHOP'S ENGAGEMENTS – AUGUST 2024

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Thu | **10.00 am** | **Thuckalay :** Bishop's House |
| 2 | Fri | 04.30 pm | **Soosaipuram: Office of the dead** |
| 3 | **Sat** | 09.30 am<br>03.00 pm | **Mukkuttukal:** Vianney Day Celebrations at Minor Seminary<br>**Marapaddy:** Office of the dead |
| 4 | **Sun** | 03.00 pm<br>06.00 pm | **Chempagatharisu : Chapel Blessing**<br>**Plankalai: Silver Jubilee of Fr Joshy Thevalakara CMI** |
| 5 | Mon | 05.00 pm | **>> To Poondi** |
| 6-7 | Tue - Wed | 10.00 am | **Poondi :** TOT Health Commission Meeting >> Thuckalay |
| 8 | **Thu** | 10.00 am<br>03.00 pm | **Thoothoor :** Social work society, Annual day<br>**Bishop's House:** Curia meeting |
| 9 | Fri | 10.00 am | **Thuckalay :** Liturgy committee meeting |
| 10 | Sat | 04.00 pm | **Padanthalummoodu :** Major Arch Bishop's Visit |
| 11 | **Sun** | 03.00 pm | **Nithiravilai:** Major Arch Bishop's Visit |
| 12 | Mon | 10.00 am | **Changanacherry :** Inter Diocesan Meet |
| 13 | Tue | 06.00 pm | **Paramanvilai :** Feast Day Qurbana |
| 14 | Wed | 09.30 am<br>04.00 pm | **Bishop's House:** Curia meeting<br>Visit to Minor Seminary |
| 15 | Thu | 10.00 am | **Mission visit** |
| 16 | **Fri** | 06.00 pm | **Thenkasi :** Feast Day Qurbana at Vanchinagar |

| | | | |
|---|---|---|---|
| 17 | Sat | 10.00 am | **Bishop's House :** Mission Leauge National Meeting |
| 18 | Sun | 07.00 am | Pastoral Visit at Pathukani |
| 19-31 | Mon | 10.00 am | **Kakkanad : Syro Malabar Bishop's Synod** |

**Fr. Liju Mathew, Bishop's Secretary**

| BIRTHDAY OF REV. FATHERS- AUGUST - 2024 | |
|---|---|
| FR. JOSHY THEVALAKKARA CMI | 01 |
| FR. SOORAJ KADAVIL MCBS | 01 |
| FR. VINOD KANAKALIL | 04 |
| FR. SHAN AYALLOOR | 08 |
| FR. RAJESH VAYALUMKAL MCBS | 09 |
| FR. PRINCE CHERIPPANATTU | 10 |
| FR. ROBINS KUZHIKODIL | 14 |
| FR. GEORGE KANDATHIL | 14 |
| FR. MATHEW AREKALAM CMI | 19 |
| FR. TIBIN KOOVALLOOR | 22 |
| FR. VIVEK KALARITHARA MCBS | 29 |

| FEASTDAY OF REV. FATHERS- AUGUST - 2024 | |
|---|---|
| FR. VIVEK KALARITHARA MCBS | 08 |
| FR. ROCKY(Binu)KULANGARA MCBS | 16 |
| FR. AUGUSTINE THALODIL | 28 |
| FR. TOBIN ALAPURACKAL | 28 |



Parish Feast, July 07, 2024,
St. Thomas Church, Mathapuram



Tenkasi Mission, One Day Seminar For Catechism Teachers and Students, Piranoor Boarder, July 21, 2024



First Holy Communion and Parish Feast,
July 14, 2024, St. Benedict's Church, Bengiri



St. Alphonsa Shrine Feast,
July 28, 2024, Nagercoil



St. Vinent De Paul, Central Council Anniversary,
July 14, 2024, Nithiravilai

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop’s House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570